# அறவழி
NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாதஇதழ் ❋ 1986 புரட்டாதி பக்கம் 10 ❋ விலை 2-00 வழி 5

காந்தி பிறந்த தினத்தில்

## தமிழ்த்தியாகிகளின் பேரில் மரம் நாட்டும் பணியினை முன்னெடுப்போம்!

மகாத்மா காந்தியின் பிறந்ததினமாகிய அக்டோபர் 2-ம் திகதி முதல் ஒரு வாரத்திற்கு, தமிழ்ப் பிரதேசங்களில் தியாகிகளின் பேரில் மரம் நாட்டும் பணியினை அறவழிப் போராட்டக் குழு முன்னெடுக்கவுள்ளது.

தமிழ் சமுதாயத்தின் உயர்வுக்காக சமூக, கல்வி அரசியல் துறைகளில் தம்மை அர்ப்பணித்து, சேவையாற்றி தியாக மரணங்களைத் தழுவிக் கொண்டவர்களை, எதிர்காலச் சந்ததியினர் தம் வாழ்வில் நினைவுகூர உதவும் ஒரு பணியாக அவ்வக் கிராமங்களில் தியாகிகளின் பேரில் மரக்கன்றுகளை நாட்டும் வண்ணம் அறவழிப் போராட்டக்குழு வேண்டுகோள்விடுக்கின்றது.

தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியில் தியாக மரணங்களைத் தழுவியவர்களுக்கு, கல்லறைகளோ நினைவுத் தூண்களோ-நினைவு மண்டபங்களோ இன்று இல்லை. சமுதாயத்தின் விடுதலைக்காகப் பணியாற்றியவர்களை மக்கள் நினைவில் கொள்வது அவசியமானதாகும்.

எனவே, தியாகிகளின் பேரில் கிராமங்களில் மரக்கன்றுகளை நாட்டி, அவை யாரின் ஞாபகார்த்தமாக நாட்டப்பட்டுள்ளன என்ற விபரங்களையும் மரக்கன்றுகளின் அடியில் தெரிவித்துக் கொள்வதன் மூலம் தியாகிகளை மக்கள் தம் நினைவில் கொள்ள இயலுவதாகும் என அறவழி கருதுகிறது.

## வாசகர்களே!

நெருக்கடி மிக்க இன்றைய கால கட்டத்தில் பத்திரிகை வெளியிடுதல் என்பது பாரிய பணியாகும். பத்திரிகைத்தாள்களின் விலை உயர்ச்சி, அச்சுயந்திரக் கூலி உயர்ச்சி போன்றவற்றுடன் நாம் ஈடுகொடுக்க இயலாதவர்களாகவுள்ளோம்.

எனவே, இவ்வாறான தவிர்க்க முடியாத காரணங்களை முன்னிட்டு, இம்மாதம் முதல் அறவழியின் விலையில் மாற்றத்தினை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம்.

இதன் பிரகாரம் இம்மாதம் முதல் அறவழியின் விலை ரூபா 2|= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்குத் தெரியத்தருகின்றோம்.

அறவழி பத்திரிகையின் வளர்ச்சி கருதி, வாசகர்களாகிய தாங்கள் தொடர்ந்தும் எம் பணிக்கு ஆதரவு நல்கி ஆக்க-ஊக்கப்படுத்துமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

— ஆசிரியர் —

● நாட்டுக்கு நல்லது ஒற்றுமையுணர்வே!

# அறவழி

சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கத்தின் இலங்கைக் கிளையும், சர்வதேச தோழமை இணக்க இயக்கம்,- புதிய சமுதாய மாற்ற இயக்கம்,- பலதேசியக் கூட்டுக்குழு - சர்வதேச நல்லொழுக்க வாலிபர் அமைப்பு போன்றவற்றின் இணைப்பு ஸ்தாபனமுமாகிய அறவழிப் போராட்டக் குழுவின் தமிழ் மாதாந்தப் பத்திரிகையாக வெளியிடப்படுவதுதான் அறவழி

மகாத்மா காந்தியின் அறவழி—சமாதானக் கொள்கைகளை தமிழ் மக்கள் மத்தியில் பரப்பி தமிழர் சமுதாயத் அன்பு—அகிம்சை-எளிமை ஆகியவற்றினை மையப்படுத்தக்கூடிய சமுதாய மாற்றச் சிந்தனைகளையும் - செயலூக்கத்தினையும் சேவையையும்-உருவாக்குதலே இப்பத்திரிகையின் பணியாகும்.

ஆசிரியர் குழு :

க. ஜீவகதாஸ்
ஏ. பேரம்பலம்
வீ. எஸ். துரைராஜா
வீ. ஜீ. தங்கவேல்

சந்தாவிபரம் :

ஒரு வருடம் ரூபா 24-00
(தபாலில்) ரூபா 30-00
தனிப்பிரதி ரூபா 2-00

அச்சகம் :

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு :

அறவழிப் போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண் : 2
சாவகச்சேரி.

## காந்தி மகான் இன்று....

காந்தி மகான் இன்று காலைக்கதிரவன்
காரிருள் நீங்கிட இங்கு வந்தான்
காந்தியுடன் நாடு சத்தியுடன் வாழ
சத்திய காதலைத் தந்த மகான் (காந்தி)
ராட்டையிலே நாட்டு மானத்தை காத்து — நாம்
வீட்டையும் காத்திட ஓடி வந்தான்
காட்டு விலங்குகள் மத்தியிலே — ஒரு
காருண்ய மாமுனியாக வந்தான் — (காந்தி)
வான்மறை வள்ளுவன் வாய்மை விளக்கினை
வாழ்க்கையில் காட்டிட வந்தவர் தான்
ஆண்மையுடன் மாந்தர் அஞ்சாமல் வாழ்ந்திட
ஆத்ம சத்தியினைத் தந்த மகான் (காந்தி)

## 2400 மணிநேர சமூகசேவை

சுவிஸில் இருக்கும் தூண் எனும் பிரதேசத்தில் திருமதி விலினேதர் எனும் பெண்மணியினால் ஆதரிக்கப்பட்டு வரும் 40 இலங்கைத் தமிழ் இளைஞர்கள் சென்ற வருடம் தூண் பிரதேசத்தில் 2400 மணிநேரம் சமூக சேவை வேலையில் ஈடுபட்டார்கள் எனத் திருமதி விலினேகர் தெரிவித்துள்ளார்.

தூணில் இருக்கும் தமிழர்களின் தாய் என திருமதி விலினேகர் அழைக்கப்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## புதிய உலகம்

"உங்கள் வாழ்வு அன்பில் மலரட்டும். ஒருவரை ஒருவர் ஏற்பதில் மலரட்டும். ஒருவர் ஒருவருக்குக் கொடுப்பதில் நிறைவு காணட்டும். ஒவ்வொரு குடும்பமும் வாழ முயற்சித்தால் புதிய உலகம் உருவாகும்."

# காந்தியக் கல்வி முறை

பேராசிரியர் குணசேகரம் நேசையா அவர்களைக் கௌரவிப்பதற்காக அறவழிப் போராட்டக் குழுவின ரால் ஒழுங்குபடுத்தப்பட்ட இவ்வைபவத்தில் ''காந் தியக் கல்விமுறை'' என்னும் விடயம் பற்றி ஆய்வுரை நடத்துவதற்காகச் சில நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது மிக மிகப் பொருத்தமான செயலென நான் கருது கிறேன்.

கடந்த காலச் சரித்திரங்களை நாம் புரட்டிப்பார்ப் போமானால் மக்களுக்கு நல்வழிகாட்டுபவர் அடிக்கடி தோன்றுவதில்லை. பல நூற்றாண்டுகள் கடந்தும் எம் மத்தியிலே ஒரு பேராசான் தோன்றுமலுமிருக்கலாம். இருந்தால் போல் வந்து தோன்றுமொரு பேராசான், தானும் வாழ்ந்துகாட்டி, மற்றவர்களுக்கும் எப்படி வாழவேண்டுமென்று வகுத்துத் தருகிறார். எமது தாய் நாடாகிய இந்தியாவில் தோன்றி இந்நூற்றாண் டில் வாழ்ந்து மறைந்த என் கண்காணாத காந்தியடி களின் வாழ்க்கை முறைகளையும் கொள்கைகளையும் என் கண்முன் காட்சியளிக்கும் பேராசான் திரு. கே. நேசையா அவர்களிடம் நான் காணக்கூடியதாயிருக் கிறது.

''நான் புதிதாக எதையும் கற்பிக்க முன்வர வில்லை. அகிம்சையும் சத்தியமும் அதிதொன்மை யுடையதாகும்'' இது காந்தியடிகளின் வாக்கு.

வாழ்க்கையை முழுமையானதாகவும், தன்னிறை வுடையதாகவும் காணும் காந்தியடிகள் தன் புதிய கல்வித் திட்டத்திற்கு 'Nai Talim' அதாவது 'புதிய கல்வி' என்ற பெயரைத் தந்தார். இங்கு கல்வி புத்தக மையமாயிராமல், வாழ்க்கையை மையமாகக் கொண்டுள்ளது. அதோடு ''வாழ்க்கைக்காக வாழ்வி னூடாக, வாழ்க்கை முழுவதும் நடைபெறுவது கல்வி யாகும்'' என்ற எண்ணக்கருவும் உருவானது. இந்தியா வின் கறைபட்ட அரசியல் பொருளாதார சமூக குறை பாடுகளை நீக்கும் முயற்சியே காந்தியடிகளின் கல்வி முறைக்குப் பின்னணியாக அமைந்தது ஆங்கிலேயரது கல்விக் கருத்துக்களை, அவர்களது அடிப்படைக் கல்வி முறைகளை, The British Education System was not merly westeful but dangerously harmful'' என விமரிசித்த காந்தியின் சிந்தனையின் விளைவாக, இந்தியா போன்ற நாடுகளுக்குத் தேவைப்படுவதும், சிக்கனமானதும், நடைமுறைப் பயன் மிக உள்ளது மான கல்வி முறையாக இவ்வாதாரக் கல்வி முறை யைக் காந்தி கருதினார்.

உடல் உழைப்புடன் இணைந்த தொழில் அடிப் படையில் அமைத்த ஆதாரக் கல்வி முறையைக் காந்தி கருதினார்.

உடல் உழைப்புடன் இணைந்த, தொழில் அடிப் படையில் அமைக்த ஆதாரக் கல்வி, பிள்ளைகள் மன தில் உழைப்பின் மகத்துவத்தை உணரச் செய்யும் மனப்பாங்கினை வளர்க்க வேண்டுமென விரும் பினார். பிள்ளைகளிடத்தே மறைந்து கிடக்கின்ற சகல ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதன் மூலம் முழுமையான ஆளுமை விருத்தியை ஏற்படுத்தலா மென்பதே காந்தியக் கல்வியின் நோக்கமாகும். அவர் வேண்டுவது சிந்திக்கும் மனத்தோடு சிந்தித்துச் செயலாற்றும் கரங்களே. கற்றல் ஆரம்பத்திற்கு பாரம் பரிய 3 R (Reading, Writing, Arithmetic) ஐ விடுத்து, நவீனமான 3 H (Head, Heart, and Hand) அவசியம் என்பதை வலியுறுத்தினார். நூற்கல்வி அறிவினைக் கொடுப்பதற்கு வழியாகாது; அறிவினை எடுத்துக் காட்டும் கருவியாக மட்டுமே அது அமையும் என்பது இவர் கருத்தாகும். ஆனால் ஆதாரக் கல்விமூலம் பிள்ளைகள் சகல பாடங்களையும் செய்கை மூலம் ஒழுங் காகக் கற்பது மட்டுமல்ல, தரமான பொருட்களை உற்பத்தி செய்யவும், தொழில் மகத்துவத்தை உணர வும், இதன் மூலம் பிள்ளைகள் தொழில் திறமையில் நாட்டம் கொள்ளவும், தமது தொழிலின் சிறப்பை உணரவும் செய்கிறது. மற்றவர்களை மதித்து நடக்கும் மனப்பான்மை ஏற்படுவதோடு, கூட்டுறவு, சமூக உறவு என்பன சிறப்படைகின்றன. 14 வயதிலேயே ஒரு பிள்ளைக்கு ''நான் என் பெற்றோருக்கு என் னத்தை உண்ணக் கொடுப்பேன்'' என்ற உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்கிறார் காந்தி.

கற்றலை வாழ்க்கையுடன் இணைப்பது கைப் பணியே என்பதை வலியுறுத்துவது ஆதாரக் கல்வி யாகும். இது ஆரம்ப ஆதாரக் கல்வி. ஆதாரக் கல்வி, உயர் ஆதாரக் கல்வி, முதியோர் கல்வி என்னும் நான்கு நிலைகளினூடாக வழங்கப்படக் கூடியதாக அமைந்துள் ளது. டாக்டர் ஜாகிர் தலைமையிலும் B. G. கேர் தலை மையிலும் இயங்கிய இரண்டு குழுக்களும் ஆதாரக் கல்விமுறையின் முக்கிய கருத்துக்களை பின் வருமாறு கண்டனர்.

1. ஏழு ஆண்டுகளுக்குகேனும் இலவச கட்டாயக் கல்வி.
2. தாய்மொழியே கற்பித்தலுக்கான சிறந்த பயிற்று மொழியாக அமைதல்
3. துவக்கப் பள்ளிக் கல்வியில் சமூக சூழ்நிலைக் குப் பொருத்தமான கைப்பணி.
4. இங்கு சுத்தம், சுகாதாரம், குடிமைப் பயிற்சி, வேலை துதித்தல், விளையாட்டு, பொழுது போக்குச் செயல்களை சிறப்பிடம் பெறுகின்றன.
5. இம்முறையில் கைப்பணியின் மூலம் எல்லாப் பாடங்களும் முறையாகவும் விஞ்ஞான ரீதியாக வும் கற்பிக்கப்படுகின்றன.

காந்தியடிகளின் கல்விச் சிந்தனைக்கு உறுதியளித்த சிந்தனையாளர்கள் டால்ஸ்டாயைத் தவிர ஜோன் றஸ்கின் ( John Ruskin ) என்பவருமாவர். இவரின் செல்வாக்கினால் சாதி, வகுப்பு, மதம் என்ற வேற்றுமை யெதுவுமின்றி ஏற்றத்தாழ்வு, சுரண்டலுமற்ற உட லுழைப்பை ஆதாரமாகக் கொண்ட சர்வோதய சமு தாயம், கல்வி மூலமே உருவாகலாம் என நம்பினார். இவ்வியக்கம் பல துறைகளின் வளர்ச்சியைத் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# அச்சம் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை

அச்சம் ஒரு விலங்குபோல நம்மை அறிவற்ற தன்மையதாக்கிவிடுகிறது. நம் சிந்தனைக்குத் தடையாக, ஒற்றுமைக்குத் தடங்கலாக, முயற்சிக்கு முட்டுக்கட்டையாக, மூடநம்பிக்கைக்கு மூலமாக, உண்மையை மறைக்கும் திரையாக அது இருக்கிறது.

''உலகத்தில் மனித முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது அச்சஉணர்வே. அச்சத்திலிருந்து விடுதலை அடைவதே உண்மையான லட்சியம் ஆகும்'' என்றார் தாகூர்.

அச்சமே முன்னேற்றத்தின் முட்டுக் கட்டையாக நிற்கிறது. உயிரற்ற பழக்க வழக்கங்களுக்கு அடிமையாக இருப்பது அச்சமே. பரம்பரையாக வந்த பழக்கங்களை எப்படிவிடுவது, வழி வழி வந்த வழக்கங்களைக் கைவிடுவது எவ்வாறு? இந்த அச்சத்தால் தான் அறிவற்ற பழக்க வழக்கங்களை உதறித் தள்ள முடியாமல் தவிக்க வேண்டியிருக்கிறது. அதனால் நம் முன்னேற்றம் தடைபடுகிறது. அறிவு வளர்ச்சி குன்றுகின்றது. சிந்தனையும் செயலும் ஒடுங்குகிறது.

எங்கு மனதிலே அச்சமின்றி மக்கள் தலை நிமிர்ந்து நிற்கின்றார்களோ, எங்கு சிந்தனை சுதந்திரமாகச் செய்யப்படுகிறதோ, எங்கு ஓய்வற்ற முயற்சி உயர்வைக் காட்டுகிறதோ, எங்கு பகுத்தறிவு என்ற ஒளி பாழான பழக்கங்கள் என்ற இருளில் மறைந்துவிடவில்லையோ—எங்கு சிந்தனையும் செயலும் பரந்து விரிந்து வளர்ந்துகொண்டே இருக்கின்றனவோ அங்குதான் வெற்றி பெற முடியும்.

இவ்வுலகம் தோன்றியதில் இருந்து எத்தனை கோடி மக்கள் பிறந்து வாழ்ந்து இறந்து போயிருக்கிறார்கள். எண்ணவே முடியாத தொகையாகும். ஒரு சிலரை மட்டும் நாம் நினைவில் வைக்கிறோம், போற்றுகிறோம்-காரணம் என்ன?

உண்டு, உறங்கி, பின் மாண்டுபோவதில் எந்த உயர்வும் இல்லை. விலங்கினங்கள் கூட இவ்வாறுதானே-இறுதியில் மடிகின்றன.

அப்படியானால் நமக்கும் விலங்குகளுக்கும் வேறுபாடு இல்லையா? விலங்குபோன்ற வாழ்வு தான் நமக்கு அமையவேண்டுமா? செயற்கரிய செயலைச் செய்ய உடம்பைப் பெற்ற நாம் அதன் பயனை பெறவேண்டாமா? உடம்பினால் உழைக்க முடியும் என்ற உறுதி ஏற்படும் போது அச்சம் அகன்றுவிடும். உடம்பு என்ற கரும்பில் இருந்து வெற்றி என்ற சாற்றைப் பிழிய முடியும். வெற்றியைப் பெறத் தவறி விட்டால், நாளடைவில் நம் உடம்பு சாறு வற்றிய கரும்புபோலாகிவிடும்.

நாம் உயர்வதற்கு, நோக்கத்தை முதலில் வைத்து அவற்றின் எல்லையினை எய்த முயற்சி செய்வது முக்கியம். நோக்கம் இல்லாமல் வாழ்க்கையை நடத்துவது-திக்குத் தெரியாத நடுக்காட்டில் பயணம் செய்வது போலாகும்.

'குறிக்கோள் இல்லாது கெட்டேன்' என்கிறார் அப்பரடிகள். எல்லோருக்கும் நோக்கம் இருந்தாலும் அது சரியானவைதானா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். குறிக்கப்படுவன எல்லாம் குறிக்கோளல்ல.

செயலை செய்திருப்பதோடு எந்த அளவு நாம் முயற்சி செய்திருக்கிறோம் என்பதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். நேற்றுவரை வாழ்க்கையின் உயர்வு குறித்து நாம் செய்த முயற்சிகள் என்னென்ன? இதுவரையில் நாம் செய்த முயற்சியினால் அமைந்திருக்கும் முன்னேற்றம் எவ்வளவு! இன்னும் எவ்வளவு தூரம் நாம் முயற்சி செய்ய வேண்டும். இவற்றை யோசிக்கும் போது சில உண்மைகள் புலப்படும்.

இது வரை நாம் செய்த முயற்சி ஒருவித பயனையும் தரவில்லை என்று புரிந்தால் முயற்சியின் வழியை மாற்றலாம். எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்று தெரிந்தால் முயற்சியை இன்னும் சற்று துரிதப்படுத்தவேண்டும்.

நம்மிடம் உள்ள தனிப்பட்ட ஆற்றல் எது? எப்படி அந்த ஆற்றலை பயன்படுத்தி, முன்னேறுவது? நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இது. இதற்குவிடையை நாம் தான் கூறவேண்டும்.

நோக்கமில்லாமல் ஊக்கமுமில்லை. ஊக்கமில்லாமல் முயற்சியில்லை. முயற்சியில்லாமல் உழைப்பில்லை. உழைப்பில்லாமல்வெற்றியில்லை.

நம்முடைய வாழ்க்கைக்கு என்று ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு அதை அடைவதற்காக நம் ஆற்றலைப் பயன்படுத்தவேண்டும். இடையில் ஏற்படுகின்ற குறைபாடுகளைக் கவனிக்காமல் நம்முடைய குறிக்கோளை நோக்கி விரைந்து செல்ல வேண்டும்.

வாழ்க்கை எனும் தோணியைக் குறிப்பிட்ட இடத்தை நோக்கிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் துடுப்புத்தான் குறிக்கோள் என்பது. கடுங்காற்று வீசினாலும், அலைகள் பொங்கினாலும் பெரு வெள்ளம் ஏற்பட்டாலும், நெஞ்சில் உறுதி இருந்தால் இடர்பாடுகள் அனைத்தையும் வென்று முன்னேற முடியும்.

வாழ்க்கையில் எந்த நிலையில் இருந்தாலும் முன்னேற வேண்டும் என்ற ஆசையை வளர்த்து, அதற்கு ஒரு எல்லையை வகுத்துக் கொண்டு செயலாற்றினால் நிச்சயம் வெற்றி பெற முடியும்.

# ஈழத்தின் தேசிய பானம்

( சென்ற இதழ் தொடர்ச்சி )

மேற்குறிப்பிட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் குழந்தைகளுக்குப் பதனீர் வழங்குவதன் மூலம் அவர்கட்கு ஏற்படும் சரும நோயிலிருந்தும், சத்துக்குறைவு நோயிலிருந்தும், இரத்த அணுக்களின் வலுக்குறைவிலிருந்தும், பாதுகாக்கப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

தாய்ப்பாலைப் போன்றதடி பாப்பா — பதநீர்
தமிழர்களின் பானமடி பாப்பா;
குடிக்கக் குடிக்க இது இனிக்கும் — உன்
கொஞ்சும் முகச்சிரிப்பைப் பெருக்கும் —

கே. சம்பந்தம்—

பனந் தோப்புகளிலும், கிராமப்புறங்களிலும் சேகரிக்கப்படும் பதநீர் நகரப் பக்கங்களுக்கும் சனநடமாட்டமுள்ள ஏனைய பகுதிகளுக்கும் விற்பனை செய்வதற்கு வசதியாகப் பல்வேறு வழிமுறைகளினை அடிப்படையாகக் கொண்டு பாதுகாக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

1. பனைமரங்களில் இருந்து பெறும்போதே பாதுகாத்தல்
2. குளிர்விக்கும் பெட்டிமூலம் பாதுகாத்தல்
3. கொதிக்க வைத்துத் திடீர் குளிர்வித்தல் மூலம் பாதுகாத்தல் —
4. நீராவி மூலம் பாதுகாத்தல்

போன்ற நடைமுறைகளைக் கையாள்வதன் மூலம் பதநீரில் உள்ள ஊட்டச் சத்துக்களும் அழியாவண்ணம் பாதுகாத்து யாவரும் அருந்திப் பயன பெறலாம்.

( முற்றும் )

# மாட்டின் லூதர் கிங்

( சென்ற இதழ் தொடர்ச்சி )

1959-ல் அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். நாம் தீமை செய்தோருக்கு நன்மைசெய்வோம், நாம் எமது எதிரிகளை நேசிப்போம் கிறீஸ்து எங்களுக்கு வழியைக் காட்டியுள்ளார். அதுவே பயன்தரக்கூடிய வழியென்று காந்தி காட்டியுள்ளார் என்று கிங் அவர்கள் உரைத்தார்கள்.

பிரிமிங்காமில் போராட்டத்தை ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. 1963-ம் வருடம் முற்பகுதி கிங் அவாகள் தனது இயக்கத்தில் ஓர் தெரிந்தெடுக்கப்பட்ட குழுவினருடன் வந்து சேர்ந்தார். அடிமைகள் விடுதலையான நூற்றாண்டுக் கொண்டாட்டங்களை அமெரிக்கா அந்த வருடம் கொண்டாடியது 1863-ல் நான் அடிமைகளாகவிருக்கும் அனைவருக்கும் இந்தக் காலம் தொடக்கம் விடுதலையாகிறார்கள் என்று ஆபிரகாம் லிங்கன் அவர்கள் பிரகடனப்படுத்தினார்கள்.

டாக்டர் கிங் அவர்கள் இந்த நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை கறுப்பின மக்களுக்கான உண்மையான விடுதலையாண்டாகக் கொண்டாட திட்டமிட்டார்கள். ஐக்கிய அமெரிக்காவின் எண்ணூறு நகரங்களிலும் பட்டினங்களிலும் வெள்ளையருக்கு எதிராகப் போராட விருந்தார். பிரிமிங்காம் நகரமே போராட்டத்தின் மத்திய களமாக அமையவிருந்தது.

ஏப்ரல் 3-ம் திகதி கறுப்பின நீக்கிரோ மக்கள் கிங் தலைமையில் அமைதியாகத் தமது போராட்டத்தினை ஆரம்பித்தனர். வெள்ளையருக்காக மட்டுமென ஒதுக்கப்பட்ட ஹோட்டல்களில் அவர்கள் நுழைந்தார்கள். அங்கு அசையாமல் இருந்தனர். அவர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. வெள்ளையருக்கென்றே ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு சுற்றூடல்களையும் அவர்கள் ஆக்கிரமித்தார்கள். வியாபாரம்வீழ்ச்சியடைந்தது. கடைக்காரர்கள் பாதிக்கப்பட்டார்கள். பெரும் நஷ்டம் அடைந்தார்கள். பொலிஸார் கறுப்பர்களைத் துரத்தத் தொடங்கினார்கள். நகர நீதிமன்றம் அசையாதிருக்கும் சத்தியாக்கிரகத்தைத் தடை செய்தார்கள்.

1963-ம் ஆண்டு ஏப்ரல் 12-ந் திகதி பெரிய வெள்ளி தினமாகும் அன்று மாட்டின் லூதர் கிங் தனது மக்களுக்குத் திருச்சபையில் உரை நிகழ்த்தினார்.

''இன்று கிறீஸ்து எமது விடுதலைக்காக இறந்தார். எம்மை ஊர்வலத்தில் செல்ல வேண்டாம் என்றும் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம் என்றும் கூறிவிட்டனர். நூறு வருடங்களாக எம்மை அவர்கள் துன்புறுத்தி வருகின்றார்கள். எம்மை அடிமை விலங்கினால் பிணைத்தார்கள். அதனை ஒடிக்க முனைந்து தோல்வி கண்டார். இந்த அடிமை விலங்கொடிக்க நாம் அணி திரள்வோம், நாம் ஆர்ப்பாட்டம் செய்வோம். அடி வாங்கத் தயாராகுவோம், சிறைகளை நிரப்பத் தயாராகுவோம். கிறிஸ்து கொல்லப்பட்டது போல் கொல்லப்படவும் ஆயத்தமாகுவோம். ஏனெனில் பெரிய வெள்ளியின் பின் கறுப்பின மக்கள் உயிர்த்தெழுவதற்கு ஈஸ்டர் தினம் வருகிறது என்றார்.

ஆயுதம் தாங்கிய பொலிஸாரினால் காவல் செய்யப்படும் ஓர் தடையைப் பொலிஸ் அதிகாரிகள் வெளியில் ஏற்படுத்தி இருந்தார்கள். நீக்கிரோக்கள் அணியாகச் சென்றனர். 16-ம் வீதியை அடைந்தனர். பொலிஸ் அதிகாரி கொனர் அவர்கள் வீதியின் முடிவில் நின்று கொண்டிருந்தார். அவர் கறுப்பர் மேல் வெறுப்பு நிறைந்த ஒருவர். அவர் நிற்குமிடத்திலிருந்து பத்து அடி தூரத்தில் அவர்களின் அணி. அணியின் நடையும் பாடலும் நின்றன.

கிங் அவர்கள் முன்னே சென்று தடையின் அடிப்பாகத்தில் இருந்த முதல் தடியை நீக்குவதற்காகக் குனிந்தார். நீதிமன்றத் தீர்ப்பினை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் தொடர்ந்து தமது அணி தடையைப் பற்றி கருத்தில் கொள்ளாது செல்லும் என்பதையும் தெளிவுபடுத்தவே அவ்விதம் செய்தார்.

பொலிஸார் சில நீக்கிரோக்களை கைதுசெய்தார்கள். அவர்களை பொலிஸ் வானில் ஆடு மாடுகள் போல் அடைத்தார்கள். நீக்கிரோமக்கள் மீண்டும் பாட ஆரம்பித்தார்கள். அவர்களின் முடிவற்ற அணி தொடர்ந்து சென்றது, அவர்கள் வெற்றிகரமாகச் சிறைச்சாலைக்கு அணிதிரண்டார்கள்.

(முற்றும்)

# காந்தியக் கல்வி முறை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

''எழுத்தறிவு மட்டும் கல்வியாகாது; தன்னைத் தானே தாபரிக்கக்கூடிய கல்வியே சிறந்தது.'. எனவே எழுத்தறிவுடன் பல்வேறு திறன்களையும் மனிதனிடத்தில் வளர்ப்பது கல்வியில் ஏனைய கடமைகளாகும் என்பதும் அவர் கருத்து செயற்பாட்டினாலேயே அறிவு தெளிவுபெறுகிறது என்ற கருத்துடன் ஒவ்வொரு பிள்ளையும் பயனுள்ள கைத்தொழிலொன்றை மையமாகக் கொண்டு கல்வியைத் தொடங்கவேண்டும். அதோடு பிரதான கைப்பணியொன்றில் நிபுணத்துவமும் துணைக் கைப்பணியொன்றில் சிறந்த அறிவும் அவசியம் என வலியுறுத்தினார். தேர்ந்தெடுக்கப்பட்ட கைப்பணி கற்றலுக்கு ஊக்கம் கொடுப்பதொன்றாகவும், எளிய முறையிற் தொடங்கி சிக்கலான முறையைக் கடைப்பிடிக்கக்கூடியதொன்றாகவும், வளரும் பிள்ளையுடன் வளரும் பணியாகவுமிருக்கவேண்டும் கைப்பணியின் ஒவ்வொரு நிலையிலும் ஏன் எதற்காக என்பதனைப் பிள்ளை விளங்கிக் கொள்ளுவதனால் அவன் சிறந்த தொழிற்பயிற்சியைப் பெறுகிறான். மூலப் பொருட்களிலிருந்து முடிவுப் பொருள்வரை உற்பத்தியைக் காணும் திருப்தியுமுண்டாகிறது. உற்பத்திப் பொருட்கள் பெறுமதியாகவுள்ளனவாகவும், சமூக தேவைக் கேற்றதாகவுமிருப்பதோடு, சுலபமாகப் பெறக்கூடிய மூலப் பொருட்களை உபயோகிக்கக் கூடிய கைப்பணியையே தேர்ந்தெடுக்க வேண்டும். அதோடு இப்பொருட்கள் நாணயப் பெறுமானமுடையதாகவும் பாடசாலைச் செலவையும், ஓரளவு நாட்டின் பொருளாதாரத்தையும் வளர்க்க உதவ வேண்டும். பாரம்பரியக் கற்பித்தல் முறைகள்யாவும் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டுமா என எழும் கேள்விக்கு புதிய முறைதான் மையமாயிருக்கும், தேவையேற்படுமிடத்தே ஏனைய முறைகள் கையாளப்படும் என்றார்.

இவ்வாசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகள் கூட்டுறவு உற்பத்திக் கற்றல் முறை மூலம் பயிற்சியளிக்கப்படுவதோடு, குழந்தை உளவியல், முதிர்ந்தோர் உளவியல், பாடசாலை நிர்வாகம், மொழிக்கற்றல் முதலியனவோடு கைப்பணியும் முக்கிய இடம் பெறும். செய்துகற்றல் கண்டறி முறைகளினால் பிள்ளைகளிடம் ஆராய்வூக்கமும் கூட்டுறவு பண்பும் தூய்மைபெற்றிருக்கின்றன; புலன் பயிற்சி வளர்கின்றது; இதோடு அறிவாற்றல், செய்திறன். கற்பனைத்திறன் சமூகமனப்பான்மை என்பன வற்றையும் பிள்ளைகள் பெறுகின்றனர்,

''படித்துக்கொண்டே உழை: உழைத்துக்கொண்டே படி'' என்பதையும் வலியுறுத்தும் காந்தியடிகள் ஒரு ஆசிரியன் தன்னால் ஆற்றமுடியாத கருமத்தை மாணவர்கள் ஆற்றவேண்டுமென்று போதிக்கக் கூடாது என்பதையும், மாணவரின் சிறந்த ஆளுமை வளர்ச்சி ஆசிரியரிலேயே பெருமளவு தங்கியுள்ளது என்றும் ஆசிரிய-மாணவ புரிந்து கொள்ளல் கற்றல் சம்பவத்திற்கு முக்கியமானவொரு அம்சம் என்பதையும் வலியுறுத்தினார்.

திருமதி ஜீ. பரராஜசிங்கம் (வளரும்)

# சிறைச்சாலையில் உண்ணாவிரதம்

வெலிக்கடைச் சிறையிலும் பூசா முகாமிலும் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் நிலை கவலைக்கிடமானதாக மாறிக் கொண்டு வருகின்றது.

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதம் இருப்போரின் தொகை 70ஆக உயர்ந்துள்ள வேளையில் பூசா முகாமில் உண்ணாவிரதம் இருப்போரின் தொகை 84 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 34பேர் யுவதிகளும், இளைஞர்கள் 50 பேருமாவார்.

வெலிக்கடைச் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த இளைஞர்களுள் மூவரின் நிலை மோசமாகக் காணப்பட்டதன் காரணமாக அவர்களை சிறைச்சாலை நிர்வாகம் மிகுந்த பாதுகாப்புடன் கொழும்பு இராணுவ வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டுசென்றது.

இதேவேளை சிறைச்சாலையிலும் தடுப்பு முகாமிலும் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்கின்ற இளைஞர் யுவதிகளுக்கு ஆதரவாக தமிழ்ப் பிரதேசங்களில் பல்வேறுவிதமான போராட்டங்களை நடாத்துவதற்குப் பொது ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்து வருகின்றன.

உண்ணாவிரதப் போராட்டத்தினைக் கைவிடுமாறு கிறீஸ்தவ, பௌத்த மதத் தலைவர்கள் தமிழ் இளைஞர்களை நேரில் கோரிய முயற்சி பலனளிக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

# வாய்ப்பைப் பயன்படுத்து!

''தீவிர சிந்தையில் உருவான முடிவை உடனே செயலாக்கத் தயங்காதே. அதில் தவறு செய்யாதே. அந்த முடிவைப் பற்றி நீ சிந்திக்கத் தொடங்குகின்ற பொழுது உனக்குள்ள பொறுப்பை மறக்காதே, மறந்தால் உனக்கு வந்த நல் வாய்ப்பை இழக்கவேண்டியதாகிவிடும்.''

நல்ல முடிவெடுக்கத் தொடர்ந்து முயற்சிக்கவும், இம் முயற்சியில் வரும் வாய்ப்பை நீடித்தேனும் பலனைப்பெற வேண்டும். அதை தடைப்படாவிட்டால் குறிப்பிட்ட பலனை அடைய முடியாது, பின் தவவிட்டுவிட்டோமே என்ற மனத்துயர் வந்து சேரும்.

## தழும்புகள்

என் இதய மேடையிலே
இராக தாளத்துடன்
நாட்டியம் ஆடும்
நினைவுச் சுவட்டுத் தடயங்களே.
உங்களுக்கு உங்கள்
ஆனந்த நர்த்தனத்தில்
ஓய்வே இல்லையா?
உங்கள் ஆனந்தக் கூத்தின்
பாதநட அதிர்வுகளினால்
என் இதயம் படிர், படிர்
என வெடித்து குபீர் குபீர் என
குருதியைப் பாச்சி
என் இரத்த நாடி நரம்புகளை
வெடிக்கச் செய்கின்றனவே
அது எதனால்?
ஓ ... ... .. ... அதுவா?
அது அறவழியினரது நினைவுகள்
உணர்வுக் கோலமாய் என் இதயத்துள்
ஏதேதோ இராகங்கள் மீட்டுவதனால்
நீங்கள் போடும் தாளங்களா.
அண்ணன்மார் உண்மையிலும் உண்மை.
நானாக மீட்டிய இராகங்கள் அல்ல.
நான்தான் உங்கள் இதயதேவதை என.
உங்கள் பார்வைகள் என்னைத் தினம் தினம்
சாடியதனால் என் உணர்வுகள் — இல்லை.
அறவழியினர் உணர்வுகளும்
என் உணர்வுகளில் உறைந்தன
சில்என்ற பார்வை வெடித்துச் சிதறும் வார்த்தை
இவைகளால் எழுந்த ஆத்மார்த்த இறுக்கம்
சிலமணிப் பயணத்தில் முழுமை பெற்று
இராகத்தின் வர்ணம் சல்லாப தாகம்
அறவழி பயணம் தொடங்கியவுடன்
என் பார்வை — அல்ல என் பாதை.
மாறியதுவோ — மாற்றப்பட்டதுவோ.
பலவந்தமா. அல்லது பயமுறுத்தலா?
என் பட்டம் பதவியா. அல்லது பழக்கமா?
இவைகளின்றி பாரினில் உள்ள பகட்டுத் திறலா?
இல்லவேயில்லை — அறவழியின் அன்பு
இராகங்களை கலைத்தாலும் அறவழியின்
அன்புத் தழும்புகள் மாறுவதெப்போது!

— செல்வி இ. உதயகுமாரி —

## காந்தி அருளியது

- ☐ உனது எண்ணங்களை மறைக்காதே; அவற்றைச் சொல்வது வெட்கம் என நீ எண்ணினால் நினைத்தது அதை விட வெட்கம் அல்லவா?
- ☐ பயனுள்ளது எதுவும் அழகாகவே இருக்கும்.
- ☐ கடவுள் குடிகொண்ட உள்ளம் படைத்தவர்களுக்கு உழைப்பே வழிபாடாகிறது.
- ☐ இராம ராஜயம் என்பது தூய ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைகின்ற மக்களாட்சி.

## எழுத்தறிவு தினம்

சர்வதேச எழுத்தறிவு தினத்தினை முன்னிட்டு அறவழிப் போராட்டக்குழு சாவகச்சேரியில் மூன்று வகையான திட்டங்களை செப்தெம்பர் மாதம் 8-ம் திகதி நடாத்தியது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில், கல்லூரி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் தலைமையில் ''கல்வி அறிவுக்கா இல்லை தொழிலுக்கா'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இப்பட்டி மன்றத்தில் 'கல்வி அறிவுக்கே' என பண்டிதை திருமதி சுவமலர் அருச்சுனனும், கல்வி தொழிலுக்கே என ஆசிரியர் திரு. ப. செல்லத்துரையும் வாதிட்டனர்.

இவர்களது வாதத்துக்கான தீர்ப்பினை டிறிபேக் கல்லூரி ஆசிரியை திருமதி கமலநாதன் வழங்கி உரையாற்றினர். கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் இப்பட்டி மன்றத்தில் பங்குகொண்டிருந்தனர்.

இத்தினத்தினை முன்னிட்டு,அறவழிப் போராட்டக்குழுவின் முதலுதவிச் சேவைத் தொண்டர்கள் 30 பேர், கைதடி வடக்கு தெற்கு கிராம சேவையாளர்கள் பிரிவினில் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டனர். இவ் ஆய்வு மூலம் 16 வயதுக் குட்பட்டு பாடசாலை செல்லாமல் இருப்போர் பற்றிய தரவுகளையும், அவ்வாறு கல்வி பெற முடியாமைக்குரிய காரணங்களையும் தொண்டர்கள் திரட்டினர்.

மூன்றாவது நிகழ்ச்சியாக, பணிமனையில், கையொப்பங்கள் வைக்கத் தெரியாதவர்களுக்கு கையொப்பம் வைக்கின்ற பயிற்சியும் பலருக்கு வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. தங்கராசா விசேட விருந்தினராகப் பங்கு கொண்டு கையொப்பம் வைக்கின்ற பயிற்சியினை ஆரம்பித்து வைத்தார். கைதடி நுணுவில் அகதிகள் முகாமில் இருக்கின்ற அகதிகளில் பலருக்கும் இப் பயிற்சி அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வைபவத்தில் முன்னாள் அதிபரும், வீரகேசரி நிருபருமாகிய திரு. ட. எம். இராசலிங்கமும் பங்குகொண்டு, எழுத்தறிவு தினப்பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

இறுதியில், பணிமனைத் தொண்டர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# செய்திச் சிதறல்கள்

- யாழ் நகரில் இம்மாதம் 7-ம் திகதி கோட்டை இராணுவ முகாமில் இருந்து 100-க்கு மேலான ஷெல்கள் பிரயோகிக்கப்பட்டன. இதில் இருவர் கொல்லப்பட்டனர், பத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

- பூஸாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 2500 தமிழ் இளைஞர்களின் ஆறு அம்சக் கோரிக்கைக்கு ஆதரவாக வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கும் தமிழ்க் கைதிகள் இம்மாதம் 7-ம் திகதி உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 111 முகாம்களில் இருந்து ஆயுதப் படையினர் இயங்குகின்றனர்.

- வெளி மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டம் வந்துள்ள அகதிகள் தொகை: கிளிநொச்சி 800 குடும்பம், வவுனியா 300 குடும்பம், திருமலை 1000 குடும்பம்.

- இலங்கை இனப்பிரச்சனை தீர்வு சம்பந்தமாக இலங்கை அரசின் புதிய யோசனைகள் அடங்கிய மாற்றுத் திட்டம் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது என பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

- அண்மையில் மன்னாரில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் 25 கடைகளும் 3 வீடுகளும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

- ஷெல் தாக்குதல் காரணமாக யாழ். மத்திய கல்லூரியின் ஆய்வுகூடம் சேதத்துக்குள்ளாகியது.

- நெடுந்தீவில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

- இலங்கை-இந்திய அரசு உடன்படிக்கை மூலம் இந்தியாவுக்குக் குடிபெயரவேண்டிய ஐந்து லட்சத்து நாலாயிரம் பேரில் இதுவரை நான்கு லட்சத்து எண்பதாயிரத்து நானூற்று முப்பதுபேர் இந்தியா சென்றுள்ளனர்.

- ஈ. பீ. ஆர். எல். எவ். இயக்கம் 50 சதம் பெறுமதியான ஈழம் தபால் முத்திரையை வெளியிட்டுள்ளது.

- பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லால் 8 பேர் படுகாயமுற்றனர்.

- தமிழர்களுக்கு எதிராகச் சண்டையிடும் நோக்கம் எமக்கில்லை. தமிழ்ப் போராளிகளுடனான போரில் அரசபடையினர் வெற்றிகொள்ளமுடியாது என ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து தப்பிச் சென்ற இரு இராணுவ வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

- இனப் பிரச்சனைக்கு தீர்வுகாணும் விடயத்தில் இந்தியாவின் உதவி தமக்கு அவசியமில்லையென இலங்கை அரசு எண்ணுமாகில் இது விடயத்தில் தமது மத்தியஸ்தத்தை முற்று முழுதாக விலகிக் கொள்ளத் தாம் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

- சரமாரியாக ஏவிய ஷெல்களினால் யாழ். ஆஸ்பத்திரியின் சிறுவர் வார்டு பலத்த சேதத்துக்குள்ளாகியது.

- சாதாரண சிங்கள மக்கள் எமது எதிரிகளல்ல. அரசுதான் எமது எதிரி. நாம் மக்களுக்கெதிராக ஆயுதம் தூக்கமாட்டோம். இராணுவத்தில் இருந்து வெளியேறும் எவரையும் காப்பாற்றி பாதுகாப்பாக அவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைப்போம் என விடுதலை அமைப்புகள் அறிக்கை விட்டுள்ளன.

- கைதடியில் ஆயுள்வேத மூலிகைத் தோட்டம் ஒன்றினை அமைப்பதற்கு சர்வதேச சமாதான சேவை இயக்கம் ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

- இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் விழாக்களிலே தொடர்ச்சியாக ஒலிபெருக்கி பாவித்தல், பட்டாசு கொழுத்துதல் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென பருத்தித்துறை பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

- திருமலையில் இருந்து அகதியாக யாழ்நகர் வந்திருந்த எட்டுப் பிள்ளைகளின் தாயான திருமதி ஜெசெக் ஜலின் நீட்டா ருக்மணி (52) ஷெல் தாக்குதால் உடல் சிதறி மரணமானார்.

- குடாநாட்டில் விறகுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விறகு லொறிகள் இங்கே வராமல் இருப்பதே காரணமாகும்.

- வெளிநாட்டுப் பயணத்தைமேற்கொண்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பிரயாண முகவர்களால் ஏமாற்றப்பட்டு பம்பாயில் அவதிப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வரும் சிவில் யுத்தத்தினால் இதுவரை சுமார் 15,000 போர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 10,000 பேர் தமிழரென்றும், மிகுதி 5000 பேர் முப்படையினர் உட்பட சிங்களவர் ஆவார் என நிதிமந்திரி ரொனி டி மெல் கூறியுள்ளார்.

- யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்கள் யாழ். அரசாங்க அதிபர் பணிமனையை முற்றுகையிட்டு ஷெல் தாக்குதலில் இருந்து யாழ். வைத்திய சாலையைப் பாதுகாக்க உதவும்படி கோரியுள்ளனர்.